**தமிழ் ஐக்கிய சங்கம்** எர்ணாகுளம் கேரளா
**இனிய நந்தவனம்** மாத இதழ்
**காவிரி கவித்தமிழ் முற்றம்**, திருச்சிராப்பள்ளி
**கவிமுகி** பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

# கவிதைத்தமிழின் படிநிலை வளர்ச்சியும் செல்நெறிகளும்

## தேசியக் கருத்தரங்கம்

## சான்றிதழ்

திருமிகு / முனைவர் சி. அதன்சிமோள் அவர்கள்

27 டிசம்பர் 2023இல் கேரளா எர்ணாகுளம், சங்கர ஆனந்த ஆசிரமத்தில் நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் பேராளராகப் பங்கேற்று 'அயர்லாந்தின் அட்லாண்டிக் கரையிலிருந்து' எனும் கவிதை நூலில் புலப்படும் மானுட அக்க

என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கியதைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

M. Ravindran

**திரு.இரவீந்திரன்**
தலைவர், தமிழ் ஐக்கிய சங்கம்,
எர்ணாகுளம்,கேரளா.

**திரு.நந்தவனம் சந்திரசேகரன்**
ஆசிரியர், இனிய நந்தவனம் மாத இதழ்
திருச்சிராப்பள்ளி

**முனைவர் ஜா.சலேத்**
செயலர், காவிரி கவித்தமிழ் முற்ற
திருச்சிராப்பள்ளி



# தமிழ்க்கவிதைகளின் செல்நெறிகள்

(ஆய்வுக்கட்டுரைகள்)


**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன்

முனைவர் ஞா. பெஸ்கி

முனைவர் ஜா. சலேத்

ISBN: 978-93-92705-98-4

நூலின் பெயர்

# தமிழ்க்கவிதைகளின் செல்நெறிகள்

பதிப்பாசிரியர்கள்
முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன்
முனைவர் ஞா.பெஸ்கி
முனைவர் ஜா.சலேத்

நூல் பொருள்
ஆய்வுக்கட்டுரைகள்
பதிப்பு
2023, திருவள்ளுவர் ஆண்டு - 2054.
மொழி : தமிழ்
உரிமை : காவிரி கவித்தமிழ் முற்றம்
எழுத்துரு: 12, நூல் அளவு: டெம்மி
பக்கங்கள் : 304
கணினித் தட்டச்சு.வடிவமைப்பு :
இதயன் அம்மா (8526777970)

வெளியீடு
வெற்றிமொழி வெளியீட்டகம்,
எண்.9, இந்தியன் வங்கிக் கீழ்த்தளம்,
ஹோட்டல் டால்பின் அருகில், சத்திரம் தெரு,
திண்டுக்கல் - 624 001.
அலைபேசி : 9715168794
மின் அஞ்சல் : vetrimozhibooks@gmail.com
வெளியீட்டாளர் : இரா. தமிழ்தாசன்

விலை : ரூ.350 /-

14. மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியும் மலையக அடையாள உருவாக்கமும்
திருமிகு மல்லியப்புசந்தி திலகர் - 178

15. வாழிட உரிமை கோரும் புலம்பெயர்ந்தோர் கவிதைகள்
முனைவர் ஞா.பெஸ்கி - 209

16. பாவேந்தர் பாரதிதாசனாரின் எளிய தமிழ்ப் பயன்பாட்டுக் கவி உத்திகள்
திருமிகு தமிழ்மைந்தன் ஜான் ரிச்சர்டு - 225

17. கலைஞரின் சங்கத்தமிழில் உவமைகள்
முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ் - 235

18. கவிக்கோவின் கவிதைகள் புலப்படுத்தும் மன உணர்வுகள்
முனைவர் ஆ. மரிய தனபால் - 249

19. சிற்பியின் கவிதைகளில் பாடுபொருள்
முனைவர். வெ.முத்துலட்சுமி - 249

20. வதிலைபிரபாவின் 'மரம் சுமக்கும் யானைகளின் பிளிறல்' கவிதைத் தொகுப்பில் நீர்!
திருமிகு.சி.பாக்கிய செல்வரதி - 262

21. 'அயர்லாந்தின் அட்லாண்டிக் கரையிலிருந்து' எனும் கவிதை நூலில் புலப்படும் மானுட அக்கறை
முனைவர் சி ஆன்சி மோள் - 271

22. சிலம்புக்கவிதையின் ஒப்பாய்வுக்களங்கள்
முனைவர் கு. அந்தோணி ராஜா - 279

23. கவிஞர் சிற்பியின் கவிதைகளில் உத்திகள்
முனைவர் செ. சிராஜுதீன் - 287

# 21.அயர்லாந்தின் அட்லாண்டிக்கரையிலிருந்து எனும் கவிதை நூலில் புலப்படும் மானுட அக்கறை

முனைவர் சி ஆன்சி மோள்
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி),
ஹோலி கிராஸ் கல்லூரி,
நாகர்கோவில், கன்னியாகுமரி

கவிதை ஒரு கலையாகும். கவிஞர் தான் பெறும் அனுபவங்களை கற்பனை நயத்துடனும், கருத்து செறிவுடனும், ஒலிநயம், உணர்ச்சி, இனிமை, எளிமை ஆகியவற்றைக் கலந்து கவிதை வடிவங்களாகத் தருகின்றனர். இக்காலக் கவிதைகள் சமூகத்தைச் சீரமைக்கும் நோக்கத்தோடு படைக்கப்படுகின்றன. கவிதை என்பது ஒரு பொருள் குறித்து சுருக்கமாகவும் சுவைபடவும் அழகு நடையோடு சொல்லப்படுதவதால் தனித்துவம் பெறுகிறது. இவற்றுள் புதுக்கவிதைகள் மரபுகளை உடைத்து உள்ளத்து உணர்ச்சிகளை உள்ளது உள்ளபடியே பதிவு செய்கின்றன. அந்த வரிசையில் தமிழ் மைந்தன் ஜான் ரிச்சர்டு அவரது கவிதைத் தொகுப்பான அயர்லாந்தின் அட்லாண்டிக் கரையிலிருந்து எனும் கவிதை நூலில் எண்ணற்ற அறச் சிந்தனைகள் மேலோங்குகின்றன. இந்த நூலில் புலப்படும் மானுட அக்கறையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கவிதை அறிஞர்களின் கருத்து

கவிதை குறித்து கவிமணி,

நட்பு மட்டுமே
ஒரு கூட்டுப் பறவைகளிலில்லை யெனில்
இடைவரும் தடை கடந்து
ஒரு நோக்கில்
பறக்கின்றன (பக். 24)

எனத் தம் கவிப்பரப்பில் நட்புக்குத் தனியிடம் கொடுக்கிறார். மேலும், தான் நேசிப்பவரின் நட்பு முகத்திரைக்குப் பின்னாலிருக்கும் முகத்தை அறிவதென்பது தம் வாழ்வின் பெருந்துயரெனம் முகத்தை அறிவதென்பது தம் வாழ்வின் பெருந்துயரெனம் கடப்பவர் அதிகம் என்பதை,

முகத்திரைக்குப் பின்னால்
முகங்கள் இருப்பதை உணர்த்தியது
கொரோனா மட்டுமல்ல
வாழ்க்கையும் தான் (பக்.37)

என்று கொரேனா பெருந்கொற்றுக்காலத்தின் சூழலோடு ஒப்பிட்டு எழுதியுள்ளார்.

## படிமம்

பொருளையும், அனுபவத்தையும், உணர்ச்சிகளையும் படிப்பவர் மனதில் எழுப்பிக் காட்டுவதையே படிமம் என்கிறோம். இன்றைய புதுக்கவிதைகள் நிலைத்து நிற்பதற்கும், இலக்கியத் தகுதிபெறுவதற்கும் படிமம், குறியீடு, அங்கதம், முரண் போன்ற கருத்துச்செறிவுகள் அவசியமாகின்றது.

தொலைந்து போன
நாட்களின் நாழிகைகளில்
மறந்து போன
நினைவுகளைத் தேடி
கரம் விரித்து
நீந்திக் கொண்டிருக்கிறேன்
மீள்வது எல்லாம்
வசந்த காலப் பூச்செரிதல் (பக். 45)

எனக் கடந்து போன நினைவுகளை வசதத்தின் தூதுவனாய் பன்முகங்களில் உலா வருகிறார் கவிஞர்.

## மனித நேயம்

மனிதன் அகத்திற்கூடாகப் பயணித்து, அவனது உள்ளக் கிடக்கைகள் தேவைகள், எதிர்பார்ப்புகள், அனுபவங்கள் போன்றவற்றை படைப்பாக உருவாக்குபவர்கள் படைப்பாளிகள். அறிவியல் தொழில்நுட்பமும் உலகைச் சின்னஞ்சிறு கிராமமாகச் சுருக்கிவிட்ட நிலையில் அது இதயத்தை சுருக்கிவிடக்கூடாது எனக் குரல்கள் எழுப்பிச் சமூகத்தினை தட்டி எழுப்பிகிறார் கவிஞர்.

கடன உடன வாங்கி
காலம் பூரா கஷ்டப்பட்டிடுவோம்
கருதெல்லாம் வினைஞ்சிருந்தும்
கால் வயிறுதான் நிரப்பிடுவோம்
மழைக்கால ராத்திரியில
ஓட்டுக் குடிசையில
ஓரமா நிக்கும்
கொங்காணி மனுசங்க
மண்ணை அளந்து
விதையைக் கலந்து
வியர்வை விதைத்து
உடலை உருக்கி
தம் உணவை சுருக்கி
நம் உணவை ஆக்கி
தருவோரின் விண்ணப்பங்கள்
விளைச்சலைத் தரட்டும்.

என்ற கவிதை வரிகள் மனித நேயமும் அன்பும் மாண்பும் கொண்டவையாக இருப்பது மகிழ்ச்சியையும், நிறைவையும் தருகிறது.

நடைபாதை மனிதர்கள் குறித்து தனது கவிதைகளில்
இங்கே எச்சில் துப்பாதீர்கள்
எழுதி வைத்தார்
அங்கே உறங்கவிருந்த
நடைபாதை மனிதர் ஒருவர் (பக்.98)

என்ற வரிகள் நடைபாதை நமக்கு மட்டுமானதல்ல அவற்றை நம்பி பிற மக்களும் வாழ்கின்றனர் என்பதை உணர முடிகிறது.

போர் ஒருபோதும் முடிவடையாது, அது ஏற்படுத்திய காயம் எங்கேயாவது இன்னும் இரத்தப்போக்கு இருக்கும் வரை என்று இலக்கியத்திற்கான நோபல் பரிசு வென்ற ஹென்ரிச் பால் போர்களின் நீண்ட கால விளைவுகளை கூறுகின்றார். இவற்றை கவிஞர் ஜான் ரிச்சர்டு தனது கவிதைகளில் போர் எனும் வன்முறையை,

இரத்தச் சகதிக்குள்
பிஞ்சுக் குழந்தை
சலனமற்று வீழ்ந்திருந்த
தாயின் முலை தேடி
ஆயுதக் கூட்டமே
ஆயுதக் கூட்டமே
உங்கள் விசைகளை
முறித்துக் கொண்டு - உக்கிரத்தை
சமாதான நீர் தெளித்து
அமிழ்த்தி விடுங்கள்
(பக். 90)

என்ற வரிகளில் போரின் துயரங்களையும் போரைத் தவிர்த்து சமாதானம் செய்து கொள்ளுங்கள் என்பதை உணர்த்துவதைக் காண முடிகிறது.

## குறியீடு

சொல்லின் பொருளை நேரடியாகத் தரும் முயற்சிக்குப் பதிலாக குறியீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் அர்த்தத்தை வாசகன் மனதில் விரியச் செய்யும் முயற்சியே குறியீடு கவிஞர் ஜான் ரிச்சர்ட் கவிதைகளில் பல்வேறு குறியீடு உலா வருகின்றன.

உயரப் ப்றந்த பறவையிடம்
தோற்றுப் போனது
புவியீர்ப்பு விசை
(பக். 31)

பறக்கும் சூரியசக்தி
விளக்குப் பொறிகளாய்
மின்மினிப் பூச்சிகள்
அதற்குள் அறிவியல்
வைத்தவர் யாரோ
(பக். 32)

இங்கே ஆக்சிஜன்
விற்பனைக்கல்ல
மனிதரைப் பார்த்து
சொன்னது மரம்
(பக். -32)

போன்ற கவிதை வரிகள் குறியீடு மூலம் மனிதனை சிந்திக்க வைத்துள்ளதை காண முடிகிறது.

## இயற்கை

நம் முன்னோர் நமக்கு கற்றுக் கொடுத்த வாழ்க்கை இயற்கையோடு இயைந்த வாழ்க்கையாகும். இயற்கை இடைவிடாது இயங்கிக் கொண்டிருந்ததன் மூலமாகத்தான் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். தேடல்களும் தேவைகளும் நிறைந்த வாழ்க்கையை மனிதருக்கு அர்த்தப்படுத்திக் காட்டுவது அழகுப்படுத்திக் காட்டுவதும் இயற்கைதான் இதனை,

உயர் மலைமுகடு
அடர் கானகம்
சாம வான்வெளி
நட்சத்திரக் குறியீடுகளால்
ஒளிக்கீற்றுகள் மரங்களினூடே
தவழ்ந்து நெறிந்து சென்று
சங்கிதக் குறியீடுகளுடன்
வளைந்தோடும் காட்டாறு
கீச்சிடும் கானக் குயில்கள்
சிந்தித்தேன் நான்
அடுத்த தலைமுறை
செல்களுக்குள்
இனிமேல் நீடிக்குமா என்பது ..
இந்த பூமி
மனிதருக்கு
மாட்டுமாணதல்ல (பக்.71)

என்று, இயற்கை அழித்தல், சுழல் மாசுபாடு போன்றவற்றை குறித்து கவிஞர் துயரப்படுவதை இக்கவிதை வரிகள் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

## தொகுப்புரை

சமுதாயம் மற்றும் பண்பாடுசார் உணர்வுகள் என்பன தனிமனிதன் ஒருவன் மனித சமூகத்தின் மீது செலுத்தி நிற்கும் அன்பின் அடிப்படையில் பிறப்பனவாகும்.குடும்பம் சமூகம் நாடு உலகம் எனப்பல கட்டங்களாக விரிற்து பரந்து செல்லும் இந்த உணர்வு நிலைகளே மனித நேயத்தையே மலரச் செய்வனவாகும்.இதனையே கவிஞர் ஜான் ரிச்சர்டு தனது கவிதைகளில் வழி நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. தாய்மண்ணின் வாசமும் அயலர்லாந்தின் நேசமும் இயற்கையின் பாசமும் கவிதைத் தொகுப்பு முழுவதும் பரவிக் கிடைப்பதை காண முடிகிறது. சுக மனிதர்கள் மீது அன்பு செலுத்துவது மட்டுமல்லாது, அவர்களின் சமூக நீதிக்காக குரல் எழுப்புதல், இறந்த கால அனுபவம், நிகழ்கால எதிர்பார்ப்புகள், எதிர்கால தேடல்கள் நம்மை கேள்வி சிந்திக்கத் தூண்டவும், மானுடப் பொறுப்புடன் வாழவும் அறிவுறுத்தும் கவிதைகள் அமைகின்றன என்பதை அறிய முடிகிறது.

## துணை நின்றவை


1. தமிழ் மைந்தன் ஜான் ரிச்சர்டு, அயர்லாந்தின் அட்லாண்டிக் கரையிலிருந்து, வெற்றிமொழி வெளியீட்டகம், திண்டுக்கல்.

2. தமிழண்ணல், திருக்குறளில் மனித நேயம் மீனாட்சி பதிப்பகம், மதுரை.

3. ஜே.தர்மராஜ், சுற்றுச்சூழல் கல்வி, டென்சி பதிப்பகம், சிவகாசி.